வாசிக்க: ஆதியாகமம் 26:12-34

***“காலையிலே விதையை விதை; மாலையிலும் உன் கைகளைத் தளரவிடாதே” (பிர 11:6)***

நற்செய்தியறிவிப்புப்பணி விவசாயத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்துவுக்காய் நபர்களைச் சந்திக்கும் ஒவ்வொருவரையும் பயிரிடுபவர் எனலாம். சாதகச் சூழ் நிலைகளுக்காய்க் காத்துக்கொண்டிருந்தால் விதைக்கவும் முடியாது; அறுக்கவும் முடியாது (பிர 11:1-6). “சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் கவனமாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு” என்பதே திருமறையின் கட்டளை (2 தீமோ 4:2). எத்தனை நபர்களோடு பேசமுடியுமோ அத்தனை பேரோடு பேசுங்கள்; எவ்வளவு நற்செய்திப்பிரதிகளை வழங்கமுடியுமோ அவ்வளவு வழங்குங்கள். “சிறுக விதைக் கிறவன் சிறுக அறுப்பான்; பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்” (2 கொரி 9:6). Operation Mobilisation என்ற இயக்கத்தின் நிறுவனராகிய ஜார்ஜ் வெர்வர் தினமும் முடிந்த அளவு நற்செய்திக் கைப்பிரதிகளை விநியோகித்து வருகிறார். ஏனெனில் அவர் விசுவாசிப்பது பிரசங்கி 11:2,6, “ஏழுபேருக்கும் எட்டுபேருக்கும் பங்கிட்டுக் கொடு; பூவுலகில் என்ன ஆபத்து நேரிடுமோ உனக்குத் தெரியாது... காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையைச் சோர்ந்துபோக விடாதே; அதுவோ, இதுவோ, எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய்ப் பயன்படுமோ என்றும் நீ அறியாயே!”



சிறிதாய்த் தோன்றும் தொடர்புகள் அல்லது வாய்ப்புகளை அற்பமாய் எண்ணா தேயுங்கள். ஒரு சிறிய கடுகுவிதை நிலத்தில் விதைக்கப்பட்டபோது சகல பூண்டு களிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத் தக்க மரமாகுமல்லவா? (மத் 13:31,32). ஒரு நபரைக் கிறிஸ்துவிடம் வழிநடத்தும் போது அவர் மூலமாய்ப் பல்லாயிரக்கணக்கானோர் ஆண்டவரை அறிய வழி உண்டாகுமல்லவா? அந்திரேயா தன் சகோதரன் சீமோன் பேதுருவுக்கு இரட்சகர் இயேசுவை அறிமுகம் செய்தான் (யோ 1:41,42). பேதுரு எத்தனை ஆயிரக்கணக் கானோரின் இரட்சிப்புக்குக் காரணமாயிருந்தான் என்பதை நாமறிவோமே (அப் 2:41; 4:4).

நமது வசதிகளைத் தியாகம் செய்து, கண்ணீரோடு விதைக்கவேண்டும். பயிரிடுகிறவன் விடியற்காலையில் எழுந்து சென்று நிலத்தை உழுதல், விதை விதைத்தல், நீர்ப்பாய்ச்சுதல், களையெடுத்தல், உரமிடுதல் முதலிய கடின வேலை களையெல்லாம் தியாகத்துடன் செய்கிறான். லூக்கா 13:7,8இல் நாம் பார்க்கும் தோட்டக்காரன் மூன்று வருடங்களாகப் பாடுபட்டும் கனிதராத அத்திமரத்திற்கு இன்னும் ஒரு வருடம் சுற்றிலும் கொத்தி, எரு போடுவேன் என்று சொல்லிப் பொறுமையுடன் செயல்படுகிறான். கண்ணீரோடு விதைக்கும்போது களிப்போடு அறுப்போம் (சங் 126:5,6).

ஆத்துமாக்களுக்குச் சுவிசேஷத்தை அறிவித்தபின் விழிப்புடன் அவர்களைக் கண்காணிக்க வேண்டும். தொடர்ந்து அவர்களுக்காக ஜெபிப்பதுடன், அவர்களுக்கு வேத வசனங்களைக் கிரமமாகப் போதித்து விசுவாசிகளின் உறவில் நிலைத் திருக்கச் செய்யவேண்டும். இல்லையெனில், கோதுமைக்குள் களைகளைச் சத்துரு விதைத்துவிட்டுப் போனதுபோல துர்வுபதேசம், பின்மாற்றம் போன்றவற்றால் அவர் களை நாசமாக்கச் சாத்தான் ஆயத்தமாயிருப்பான் (மத் 13:24,25). கவனம்!